# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

<u>சுருக்கம்</u>

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் – பெருநகர சென்னை மாநகராட்சி மணலி பர்மா நகர் TPP சாலையில் மின் கம்பங்கள் பொருத்தும் ஒப்பந்த பணி குறித்த புகார் மனு –ஆணை வெளியிடப்பட்டது – திருத்தம் வெளியிடுவது தொடர்பாக.

---

ஆணை எண். 158A/மா/2024, நாள் 15.07.2025

படிக்கப்பட்டது :–

(1) திரு.எம்.இராதாகிருஷ்ணன், அறப்போர் இயக்கம், சென்னை 34 முறையீட்டு மனு, நாள் 24.11.2023.

(2) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவ ஆணை எண்.158/மா/2024, நாள் 18.12.2024.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை–28 கடித எண்.39128/2024 மா. ந. அ.3, நாள் 02.05.2025.

(4) உள்ளாட்சி நிதித் தணிக்கை, சிறப்பு இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க. எண் e 622495/ந.த (1) / 2025, நாள் 12.05.2025.

(5) சிறப்பு இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை கடித ந.க எண்.e-622495/நத (1) / 2025, நாள் 13.05.2025.

-----

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட முறையீட்டு மனு மீது இம்முறை மன்றத்தால் உரிய விசாரணை மேற்கொண்டு பார்வை இரண்டில் படிக்கப்பட்ட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதத்தில், ‘‘நகராட்சி நிர்வாக இயக்குநரக கட்டுப்பாட்டில் பெருநகர சென்னை மாநகராட்சி வராது என்பதால், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையினால் ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரால் மேல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என திருத்திய ஆணை பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

3. எனவே, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ (முறையீடுகள்/தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகள், 2015, விதி 11–ன் கீழ் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ ஆணை எண்.158/மா/2024, நாள் 18.12.2024–ல் கீழ்க்கண்டவாறு திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகிறது :-

<u>திருத்தம்</u>

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவ ஆணை எண்.158/மா/2024, நாள் 18.12.2024 ஆணையில் பத்தி 8–இல் “வரையறைகள் மற்றும் The Tamil Nadu Transparency in Tenders Act 1998 மற்றும் The Tamil Nadu Transparency in Tenders Rules. 2000 பின்பற்றி நடைபெற்றுள்ளதா என்றும் அரசிற்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்தும் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் மூலம் ஆய்வு மேற்கொண்டு அத்துறையின் அறிக்கையினை, நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு சமர்ப்பிக்குமாறு, உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை இயக்குநருக்கு இம்முறை மன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. ’’ என்ற வரிகளுக்கு பதிலாக பின்வருமாறு படிக்கவும் :-

"வரையறைகள் மற்றும் The Tamil Nadu Transparency in Tenders Act, 1998 மற்றும் The Tamil Nadu Transparency in Tenders Rules, 2000 பின்பற்றி நடைபெற்றுள்ளதா என்றும் அரசிற்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்தும் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் மூலம் ஆய்வு மேற்கொண்டு அத்துறையின் அறிக்கையினை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்குமாறு, உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை இயக்குநருக்கு இம்முறை மன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது."

4. 2025–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 15–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு.எம்.இராதாகிருஷ்ணன்,
அறப்போர் இயக்கம், எண்.7, சத்யா பிளாசா, 2வது தளம்,
டாக்டர் திருமூர்த்தி நகர் பிரதான சாலை,
நுங்கம்பாக்கம்,
சென்னை–600 034
2. ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003
3. மண்டல அலுவலர்,
மண்டலம் 2, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.1, காமராஜர் சாலை, மணலி,
சென்னை–600 068
4. இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
பேராசிரியர் க. அன்பழகன் மாளிகை, நந்தனம்,
சென்னை–600 035
5. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.
6. இணை இயக்குநர்/
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

நகல்:-

1) மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
2) ஆணை எண்.158/மா/2024 நாள் 18.12.2024.

இ.கோ/உ. ந.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது // 15/7/25

செயலாளர்.

15/7/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் (seal)